தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 4 திகதி: 13.06.15

நேரம்: 2 மணித்தியாலங்கள்

திருமதி செ. ஜெயமனோகர்

மாணவர் பெயர்:

______________________________

**வினா 1. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும். (20 புள்ளிகள் )**

பண்டிதர் ஒருவர் வேறு ஊர் செல்ல வேண்டி இருந்தது. இரு ஊர்களுக்கும் இடையில் ஒரு ஆறு ஓடுகிறது. ஆகையால் சிறிய படகு மூலமே ஆற்றைக் கடக்க முடியும். படகை ஓட்டுபவன் படகுடன் வந்தான். பண்டிதர் படகில் ஏறிக்கொண்டார். நடு ஆற்றில் படகு சென்றுகொண்டு இருந்தது. அப்போது பண்டிதர் படகோட்டியிடம் உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா எனக் கேட்டார். படகோட்டி தெரியாது என்றான். அதற்குப் பண்டிதர் 'நீ உன் வாழ்நாளில் அரைவாசிப் பகுதியை வீணாக்கி விட்டாய்' என்றார்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டு இருந்த போது ஆற்றில் வெள்ளம் கூடிக்கொண்டு வந்தது. பெரிய அலைகள் வந்து படகின் மேல் மோதின. படகு ஒரு நிலையில் இல்லாமல் ஆடத் தொடங்கியது. அப்போது படகோட்டி பண்டிதரிடம் ' ஐயா, உங்களுக்கு நீந்தத் தெரியுமா' எனக் கேட்டான். பண்டிதரும் ' ஐயோ, எனக்கு நீந்தத் தெரியாதே' என்றார்.

அந்த வேளையில் பெரிய அலை ஒன்று வந்தது. படகோட்டி பண்டிதரைப் பார்த்து, ஐயா! நீங்கள் உங்கள் முழு வாழ்க்கையையுமே இழந்து விட்டீர்கள் எனக் கூறினான். பின்னர் ஆற்றில் பாய்ந்தான். படகு நீரில் மூழ்கியது. படகோட்டி நீந்திக் கரை சேர்ந்தான். பண்டிதரைக் காணவில்லை.

இக்கதையில் இருந்து நாம் மற்றவர்களின் திறமைகளைக் குறைவாக மதிப்பிடக் கூடாது என்பதை அறிந்து கொள்ளலாம்.

1. இரு ஊர்களுக்கும் இடையில் என்ன இருந்தது.

--------------------------------------------------------------------------------------------------------

2. ஆற்றை எவ்வாறு கடந்து மறு ஊருக்குச் செல்ல முடியும்?

--------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------

3. பண்டிதர் படகோட்டியிடம் என்ன கேட்டார்?

--------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------

4. ஏன் படகு ஆடத் தொடங்கியது.

--------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------

5. படகோட்டியின் செயல் எப்படிப்பட்டது?

--------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------

**வினா 2: தரப்பட்ட இடத்தில் விடை எழுதுக ( 10 புள்ளிகள்)**

**சேர்த்து எழுதுக**

பறவை + கூட்டம் - ...................................

மழை + நாள் - ...................................

வானம் + வில் - ...................................

பல் + பசை - ...................................

நீலம் + நிறம் - ...................................

**பிரித்து எழுதுக**

காட்டுமிருகங்கள் - ................. + .....................

கண்மை - ................. + .....................

வெண்டாமரை - ................. + .....................

விமானநிலையம் - ................. + .....................

பூச்செடி - ................. + .....................

**வினா 3. கீழே தரப்பட சொற்களை ஒழுங்கு படுத்தி வசனம் அமைக்குக (10 புள்ளிகள்)**

1. உள்ளது / காட்சிச்சாலை / சிட்னியில் / நீர்வாழ் / உயிரின.

...........................................................................................

...........................................................................................

2. வரும் / நிலா / இரவில்

...........................................................................................

3. பாடினார் / தமிழ் மொழி / பாரதியார் / வாழ்த்தை

...........................................................................................

...........................................................................................

4. புதியது / இந்த / எனக்கு / தகவல்

...........................................................................................

5. தெய்வம் / பிதாவும் / முன்னறி / அன்னையும்

...........................................................................................

...........................................................................................

**வினா 4. அடைப்புக் குறியுள் தரப்பட்ட சொற்களின் சரியான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தை நிரப்புக. (10 புள்ளிகள்)**

1. பறவை முட்டை இட்டு ……………………… பொரித்தது
   ( குட்டி, கன்று, குஞ்சு)

2. அம்மா சேலை உடுத்தி நெற்றியில் ……………………… வைத்தார்
   ( நகை பூ பொட்டு)

3. இடி மின்னலுடன் ……………………… பெய்தது. ( மளை, மழை , மலை )

4. ஆமை கடலில் வேகமாக …………………….. ( நீந்தும், நடக்கும், ஓடும்)

5. நான் நேற்று மழை பெய்யும் என்று ……………………….....
   அல்லவா? ( சொல்வேன், சொன்னேன், சொல்கிறேன்)

**வினா 5. தொடர்பு படுத்துக ( 10 புள்ளிகள்)**

| | |
|---|---|
| அலை | கண் |
| சுவையான | சீட்டு |
| நுழைவு | ஓசை |
| மணி | கடல் |
| மை | தகவல் |

வினா – 6 பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி வேறு நாடு ஒன்றில் வாழும் உமது உறவினருக்கு அல்லது நண்பருக்கு நாற்பது சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. ( 20 புள்ளிகள்)

1. எமது பாடசாலையில் நடந்த பொங்கல் விழா

2. தமிழ்ப் பாடசாலக் கலைவிழாவில் உங்கள் பங்களிப்பு

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

வினா - 7 பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. (20 புள்ளிகள்)

- எனது குடும்பமும் நண்பர்களும்
- அன்னையர் தினம்
- தமிழ்ப் பாடசாலையில் எனது அனுபவம்

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................